அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

**அ.எண்:** 61 /2017
**தேதி**: 25.06.2017

# ரமலான் வாழ்த்துக்கள்

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அவர்களின் ரமலான் வாழ்த்து செய்தி.

இஸ்லாமிய மதம் போதிக்கும் அடிப்படையானவற்றில் ஒன்றாக நோன்பு இருத்தல் கடைப்பிடிக்கப்படுகிறது. ரமலான் மாதத்தில் நோன்பிருப்பது அவர்களின் அடையாளத்தில் ஒன்றாகும்.

நோன்பு காலங்களில் தொழுவதோடு, ஏழை மக்களுக்கு தர்மங்கள் செய்வார்கள். பொய் பேசுதல், மற்றவர்களை பற்றி புறம் பேசுதல், ஏமாற்றுவது போன்ற அனைத்துவகை குற்றச்செயல்களில் இருந்துகாத்துக்கொள்ள வகை செய்வார்கள். நோன்பு இருப்பது என்பது உணவில்லாத ஏழைகள் பசிக்கும் போது அவர்கள் படும் துன்பங்கள், கஷ்டங்களை எவ்வாறு அனுபவிக்கிறார்கள் என்பதை அறிந்து புரிந்துக்கொள்வதற்கும் தான்.

புனித நன்னாளாம் ரமலான் திருநாளில் மத, இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து உலகெங்கும் சகோதரத்துவம், சமத்துவம், சமாதானம் தழைத்தோங்கச் செய்திடும் நிகழ்ச்சியாக அமைத்திடுவோம்.

இந்நன்னாளில் இஸ்லாமிய சகோதர சகோதரிகளுக்கு ரமலான் நல்வாழ்த்துகளைச் சொல்லி, அவர்களது மகிழ்ச்சியில் நாமும் பங்கேற்போம். உலகெங்கும் உள்ள இஸ்லாமிய சொந்தங்களுக்கு என் சார்பிலும், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் இனிய ரமலான் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com